# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 10, 2025 Weekly E-paper • May 10, 2025



# கோவை சுயமரியாதை இயக்க மாநாட்டுத் தீர்மானங்கள்!

## மதுரையில் திராவிடப்பள்ளி மாணவர்கள் சந்திப்பு!

## ஏழாவதும் ‘தி.மு.க.தான்’

தலையங்கம்

## தமிழ்த் தேசியம் பாடிய திராவிடக் கவி!

கயல்விழி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 10, 2025

Weekly E-paper ● May 10, 2025


# கோவை சுயமரியாதை இயக்க மாநாட்டுத் தீர்மானங்கள்!

கோவையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை நடத்திய, சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநில மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் :




1) மும்மொழிக் கொள்கை எனும் பெயரில் இந்தித் திணிப்பு , ஒரே நாடு ஒரே தேர்தல், நாடாளுமன்றத் தொகுதி மறு வரையறை , நிதிப் பகிர்வில் பாரபட்சம் , மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல் ஆகியவற்றில் இருந்த பல்வேறு துறைகளை ஒன்றிய பட்டியலுக்கு மாற்றியது, ஆகியவற்றின் மூலம் மாநிலங்களை வஞ்சித்து, உரிமைகளைப் பறித்து, மாநிலங்களின் நலனுக்கும், கூட்டாட்சி தத்துவத்திற்கும் எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

2) மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்க அனைத்திந்திய அளவில் ஒத்த கருத்துடைய கட்சிகளை அணி திரட்டி, ஒன்றிய அரசின் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிராகப் போராடிவரும் தமிழ்நாடு முதலமைச்சரின் நடவடிக்கைகளை இம்மாநாடு பாராட்டுவதோடு முதலமைச்சருக்கு ஆதரவாக தமிழ்நாட்டு மக்களை அணி திரட்டும் பணியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை முழு வீச்சில் செயல்படுவது எனத் தீர்மானிக்கப் படுகிறது.

3) மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் இதுவரை இல்லாத அளவில் 9.69% வளர்ச்சியை எட்டி இந்திய அளவில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழக் காரணமான திராவிட மாடல் அரசை இம்மாநாடு வெகுவாகப் பாராட்டுகிறது.

4) ஒன்றிய அளவில் கல்வி, மருத்துவம் தொழில், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் முதன்மை மாநிலமாக திகழ்ந்து, மத்திய தொகுப்புக்கு கூடுதலான நிதி வழங்கிடும் தமிழ்நாட்டுக்கு உரிய நிதியை ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு மாநாடு கண்டனம் தெரிவிக்கிறது.

5) 1929 இல் செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்குச் சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு உரிமைகளுக்கு வித்திடப்பட்டது. அவை அனைத்தும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆட்சிக் காலங்களில் படிப்படியாக நடைமுறைக்கு வந்தன. அவரது வழியில் பீடுநடை போடும் திராவிட மாடல் நாயகர் மு .க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் மகளிர் முன்னேற்ற திட்டங்களான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், புதுமைப்பெண் போன்றத் திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருவதற்கு இம்மாநாடு தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டி மகிழ்கிறது.

6) அழித்தொழிக்க வேண்டிய சாதி அமைப்பைக் காப்பாற்றும் நோக்கிலும், தாழ்த்தப்பட்ட – பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடுக்கும் எண்ணத்திலும் ஒன்றிய பா.ஜ.க அரசால் கொண்டு வரப்பட்ட குலக்கல்வித் திட்டமான விஸ்வகர்மா திட்டத்தை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. அதே வேலையில் யார் வேண்டுமானாலும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற அறிவுப்போடு வசதியற்ற ஏழை எளிய மக்களின் திறனை ஊக்குவித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நிதி உதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் கலைஞர் கைவினை திட்டத்தை இம்மாநாடு பாராட்டி மகிழ்கிறது.



7) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்து, உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளான ஆளுநர் ஆர்.என். ரவிக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதோடு ஆளுநரை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென்று ஒன்றிய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது

8) இந்திய அளவில் முதன்முதலில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வழியில் செயல்படும் திராவிட மாடல அரசு, கடந்த நான்கு ஆண்டுகளில் விவசாயிகளுக்கு 2,50,000 இலவச மின் இணைப்புகளை வழங்கி சாதனை புரிந்துள்ளது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# மதுரையில் திராவிடப்பள்ளி மாணவர்கள் சந்திப்பு!

மதுரையில் 01-05-2025 அன்று நடைபெற்ற திராவிடப் பள்ளி மாணவர்கள் சந்திப்பு நிகழ்வில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பேராசிரியர் திருநீலகண்டன், பேராசிரியர் கண்மணி, ஆகியோர் சிறப்புரையாற்றினர். திராவிடப் பள்ளி தலைமை ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி உமாபதி தலைமையேற்ற இந்நிகழ்வில் திராவிடப் பள்ளியின் இணை ஒருங்கிணைப்பாளர்கள் தோழர்கள் கார்த்திக், வெற்றிச்செல்வன், அறம் மதி, எட்வின், பேரவைத் தோழர்கள் இராம.வைரமுத்து, குமரன்தாஸ் வேடசந்தூர் ரவி, அமர்நாத், சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.










## முன்பக்கத் தொடர்ச்சி...


இந்த வரலாற்றுச் சாதனைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி அவர்களையும் இம்மாநாடு பாராட்டி மகிழ்வதோடு, திரு. செந்தில் பாலாஜி அவர்களின் சிறப்பான செயல்பாடுகளையும், மக்கள் பணியையும் கண்டு பயந்து அவருக்கு எதிராக பொய்யான பிரச்சாரங்களை பரப்பி வரும் காவிக் கும்பலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது

9) தொழில் நகரமான கோவையின் பெரு வளர்ச்சிக்கு உதவும் வகையில் மெட்ரோ ரயில் திட்டம், விமான நிலைய விரிவாக்கம், மேற்குப் புறவழிச் சாலை, செம்மொழிப் பூங்கா, பெரியார் நூலகம், உலகத் தரம் வாய்ந்த கிரிக்கெட் ஸ்டேடியம் போன்ற திட்டங்களை கொண்டு வந்துள்ள தமிழ்நாடு அரசை மாநாடு நன்றியுடன் பாராட்டுகிறது.

10) சுயமரியாதை இயக்கம், 1928 ஆம் ஆண்டு முதல் சுயமரியாதைத் திருமணங்களையும், சாதி மறுப்புத் திருமணங்களையும் நடத்தி வந்திருக்கிறது. அவற்றைத் திராவிட இயக்கங்கள் இன்றும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றன. எனவே சுயமரியாதை, சாதி மறுப்புத் திருமணங்களைச் செய்து கொள்வோருக்குத் தமிழ்நாடு அரசு, முதல் கட்டமாக ஒரு விழுக்காடு இட ஒதுக்கீட்டை ஒதுக்கி தர வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது!

11) சுயமரியாதை இயக்கம் உருவாகி வளர்ந்த இம்மண்ணில், இன்றும் சாதி ஆணவப் படுகொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய கொடுஞ்செயல்களுக்கு மிகக் கடுமையானத் தண்டனை தரக்கூடிய தனிச் சட்டத்தை தமிழ்நாடு அரசு இயற்ற வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது!

●



திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவரும், 'கருஞ்சட்டைத் தமிழர்-மின்னிதழ் ஆசிரியருமான பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - வசந்தா அம்மா அவர்கள் 06-05-2025 செவ்வாய் இரவு, சென்னையில் இருந்து அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். ஜுலை மாதம் சென்னை திரும்புவார்.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஏழாவதும் ‘தி.மு.க. தான்’

இப்போது தமிழ்நாட்டில் தி.மு.கழகத்தை எதிர்த்து நிற்கும் கட்சித்தகுதி எதற்கும் இல்லை. அ.தி.மு.க அந்தத் தகுதியை இழந்துவிட்டது.

நீட் தேர்வை நீக்கமறுக்கும், தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய நிதியைத் தரமறுக்கும், இந்தி-சமஸ்கிருதத்தை வலிந்து திணிக்கும், தமிழ்நாட்டு மீனவர்களை- அவர்களின் படகுகளைக் காப்பாற்ற மறுக்கும், இதுபோலத் தமிழின விரோதப் போக்குடன் இருக்கும் சர்வாதிகார, பா.ஜ.கவுடன் கூட்டணியே கிடையாது என்று ’சத்தியம்’ செய்த எடப்பாடி, இன்று அதனுடன் கொண்டிருக்கும் கூடாநட்பைக் கூட்டணி என்று சொல்வதனால் கொஞ்சநஞ்சம் இருக்கும் மக்கள் ஆதரவையும் அ.தி.மு.க இழந்துவிட்டது. பா.ஜ.க. தமிழ்நாட்டில் ’போணி’ ஆகாத கட்சி.

நேற்று பிறந்த கட்சியின் தலைவர் விஜய் கோவைக்குச் சென்றபோது, அவரின் தொண்டரடிப்பொடிகள் நடந்துகொண்ட சர்க்கஸ் காட்சிகளை விஜய்யே கண்டித்துள்ளார். இதே சர்க்கஸ்தான் அவர் கொடைக்கானல் படப்பிப்புக்குப் போனபோதும் நடந்துள்ளது.

இதுபோன்ற கட்சிக் கட்டுப்பாடற்ற சினிமாக் கூட்டம், நாளைய முதலமைச்சர் மட்டுமல்ல, நாளைய பிரதமராகக் கூட ஆகிவிடலாம் என்று கனவு காண்பதை யாரும் தடுக்க முடியாது. நேற்று பிறந்தவர்கள் எல்லாம், நேற்று கட்சி தொடங்கியவர்கள் எல்லாம், அரசியலுக்கு அரிச்சுவடு கூடத் தெரியாதவர்கள் எல்லாம் நான்தான் அடுத்த முதலமைச்சர் என்கிறார்கள். அவர்களைக் கணக்கில் எடுக்கத் தேவையில்லை என்று அண்மையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் பேசியிருக்கிறார். அப்படிப் பட்ட துண்டுதுக்கடா கட்சிகள் இருக்கத்தான் செய்கின்றன, முதலமைச்சர் கனவுகளோடு.

தேர்தல் அனுபவம், ஆட்சி அனுபவம், மக்களிடம் பெரும்செல்வாக்கைப் பெற்றிருக்கும் வலிமையான இயக்கம் தி.மு.கழகமும் அதன் கூட்டணியும்.

முதல்வர் ஸ்டாலின் சொல்வதுபோல அவரின் நான்காம் ஆட்சியாண்டு நிறைவுற்று, ஐந்தாம் ஆண்டில் கால்பதித்து விட்டார். ஏழாவது முறையாக தி.மு.க ஆட்சிதான், முதல்வராகப் பொறுப்பேற்பார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



தென்காசி மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின் 73ஆம் பிறந்த நாளை முன்னிட்டு இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டக் கூட்டம் 22.04.2025 அன்று மாவட்டச் செயலாளர் அருள் ஜோதிபாபா தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் சுப.வீரபாண்டியன் எழுதிய "திராவிடத்தால் எழுந்தோம்" நூல் குறித்துத் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து, "அறிவுத் தேடல்" நூல் குறித்து பேராசிரியர் ஆ.திருநீலகண்டன் ஆகியோர் உரையாற்றினர்.

# தமிழ்த் தேசியம் பாடிய திராவிடக் கவி!

**கயல்விழி, திராவிடப்பள்ளி மாணவர்**

இருபதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற கவிஞர்களில் தமிழ்ச் சமுதாயத்தின் விடுதலைக்காக, பெரியார் வழியில் அவர் கொள்கைகளைக் கருப்பொருளாகக் கொண்டு தம் கவிகள் மூலம் குரல் கொடுத்தவர் "புரட்சிக்கவிஞர்" என்றழைக்கப்படும் 'சுப்புரத்தினம்' என்ற இயற்பெயர் கொண்ட "பாரதிதாசன்".

இவர் புதுவை நகரில் கனகசபை - இலக்குமி அம்மையாருக்கு 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ஆம் நாள் பிறந்தார். இளமையிலேயே மகாவித்வான் என்றழைக்கப்படும் பு.வ.பெரியசாமியிடமும், புலவர் பங்காரு பத்தரிடமும் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்று மாநிலத்திலேயே முதல் மாணவராக தேர்வு பெற்ற சிறப்பினைப் பெற்றவர்.



'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாரதியார் பாடியது பாரதிதாசனின் தமிழ் உணர்வு பெருக்கெடுக்கத் துணை புரிந்தது. அதன் விளைவாய் "தமிழுக்கும் அமுதென்று பேர் -அந்தத்

தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று உணர்ச்சி பொங்கப் பாடினார் பாரதிதாசன். தமிழின் சிறப்பை, தமிழின் மாண்பை "தமிழியக்கம்" என்ற கவிதை மூலம் எடுத்துரைத்தார். பாரதியாரின் மறைவுக்குப் பின் 1928 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மாயவரத்தில் பெரியாரும், டாக்டர் வரதராசலு நாயுடுவும் பேசுவதாக அறிந்த பாரதிதாசன் ஒரு காங்கிரசுக்காரராக, சைவ பக்திமானாக அக்கூட்டத்திற்குச் சென்று மாற்றம் பெற்று, அன்றோடு கடவுள், மதம் ஆகியவற்றைப் பாடுவதை விட்டு விட முடிவெடுத்தார். பின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்த பாரதிதாசன் தமிழர்களின் விடுதலைக்காக இனம், மொழி சார்ந்த பாடல்களைப் பாடினார். இத்தகைய தமிழ் உணர்வே பாரதிதாசனை தமிழ் தேசியவாதியாக அடையாளப்படுத்தியது.

'தேசியம்' என்னும் சொல் நாட்டுப்பற்று, தேசபக்தி என்ற பொருள் கொண்டது. அவ்வகையில் 'தமிழ்த்தேசியம்' எனும் போது தமிழர்களின் இனம், மொழி, நாடு ஆகியவற்றை உள்ளடக்கிய பெருமித உணர்வு அது எனலாம். அவ்வுணர்வால் தமிழர்களின் உயர்வுக்காகப் போராடியவர் பாரதிதாசன். பாரதிதாசனின் தமிழ்த் தேசியத்தில் மிக முக்கியமானது மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று எனலாம். மொழியை உயிராகக் கருதினால்தான் மொழி வளர்ச்சிக்கும் பாடுபட முடியும் என்று கூறினார் பாரதிதாசன். அவ்வகையில் 1965 இல் உச்சத்தைத் தொட்ட இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் "திருந்தாத் தமிழருயிர் வாழ்வதிலும்

இறத்தல் நன்று" என்ற பாரதிதாசனின் வரிகள் போராட்டத்திற்கு வலுச்சேர்த்தது. அதுமட்டுமின்றி தமிழ் மக்களின் உரிமை மீட்கும் போரில் "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்று கவிதை மூலம் பாடினார்.

தமிழ்க்கல்வி என்பது தமிழைப் பற்றிய கல்வி என்றில்லாமல் தமிழ் வழியிலான கல்வி என்று பாரதிதாசன் குறிப்பிட்டார். தமிழ் மொழியை கருத்தை தெரிவிக்கும் கருவியாக அல்லாமல் தமிழரின் வாழ்வை ஒன்றிணைத்து இயக்கும் உயிர்ப்பொருளாகக் கருதினார். தூய்மையும், வீரமும் தமிழர்களிடையே வளர வேண்டுமானால் தாய்மொழியான தமிழ் வழிக் கல்வியே வேண்டும் என்று வலியுறுத்தினார்.

"சாதி மதம் தமிழ் இல்லை- அந்தச்
சாதி மதத்தை தமிழ் கொள்வதும்
இல்லை கெஞ்சல் இறைஞ்சல் தமிழ் கொள்கை இல்லை" என்று தமிழ்த்தேசியத்தின் ஒரு பகுதியாக தமிழ்க் கொள்கையை வலியுறுத்தினார். தமிழர் ஒற்றுமையை வலியுறுத்தினார்.

"ஆதி மனிதன் தமிழன் தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்! மூதறிஞர் ஒழுக்க நெறிகள் முதலில் கண்டதும் தமிழகந்தான்" என்று பாடி தமிழ் இனத்தில் தான் பிறந்தமைக்குப் பெருமை கொண்டவர் பாரதிதாசன்.

தமிழை உயர்த்தினால் தமிழர் உயர்வர் என்று ஆக்கமும், ஊக்கமும் குன்றியிருந்த தமிழர்க்குப் புத்துயிர் அளிக்கத் தமிழ் தேசியம் கண்டவர் பாரதிதாசன். அத்தகைய பாரதிதாசனின் பாடல்கள் உள்ளவரை தமிழ்த்தேசியமும் தழைத்தோங்கி நிற்கும். வாழ்க திராவிடம்...!! வளர்க தமிழ்த்தேசியம்!! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian